# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**

**தலைமை இடம் - சென்னை.**

| | | |
|---|---|---|
| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** | **E.சித்தையன்** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |


**சுற்றறிக்கை / 01-2018** **18-01-2018**

அன்புடையீர்,

வணக்கம். மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வுப் பேச்சுவார்த்தையில் மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு இணையாக 1.12.2015 முதல் 2.57 மடங்கு (சுமார்14.3%) ஊதிய உயர்வு, வீட்டு வாடகை, நகரஈட்டுப்படி (சுமார்9%), சிறப்புப்படி உயர்வுகளும் மற்றும் 1.10.2017 முதல் பணப்பலனும் வழங்கப்படும் என 16.10.2017 அன்று அனைத்துச் சங்கங்களின் முன் வாரியம் கொடுத்த முன்மொழிவினை ஒப்பந்தமாக மாற்றிட நாம் தவறிவிட்டோம் என்பது தற்போது நடைபெற்று வரும் சம்பவங்கள் மூலமாக நம்மால் உணர முடிகிறது.

2.57 மடங்கு அதாவது 14.3% ஊதிய உயர்வுடன் 1.12.2015 முதல் நிலுவைத்தொகை என்பதனை நாம் வலியுறுத்தப்போய். தற்போது நிலுவைத் தொகை மட்டுமல்ல, உறுதிபடுத்தப்பட்ட 2.57 மடங்கு ஊதிய உயர்வு நிலைக்குமா? என்பது கேள்விக்குறியாகிவிட்டது.

மின்வாரியத்தொழிலாளர்களுக்கு, தமிழக அரசு ஊழியர்களுக்கு இணையாக போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தப்போய் அவர்களுடைய சம்பளம் 2.57 அளவிற்கு உயர்த்துவதற்குப் பதிலாக நம்முடைய சம்பளத்தை அவர்களுக்கு இணையாக 2.44 அளவிற்கு குறைப்பதற்கு அல்லவா வழிவகை செய்துவிட்டார்கள்.

1.12.1996-ல் நாம் தமிழக அரசு ஊழியர்களுக்கு இணையாக 5-வது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் 40 சதவிகித ஊதிய உயர்வினைப் பெற்றோம். அதே போல் 1.12.2007-ல் தமிழக அரசு ஊழியர்களுக்கு இணையாக 6-வது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் சுமார் 40 சதவீத அளவிற்கு தர ஊதியம் என்ற பெயரில் உயர்வினைப் பெற்றோம். 5-வது, 6-வது ஊதியக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய உயர்வைப் பெற்றதைப் போலவே 7-வது ஊதியக்குழு பரிந்துரையான 2.57 பெருக்கல் காரணியை ஊதிய உயர்வாக தமிழக அரசு ஊழியர்களுக்கு 1.1.2016 முதல் வழங்கப்பட்டதைப்போலவே நமக்கும் 1.12.2015/1.1.2016 முதல் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நியாயம் என நிர்வாகமும், தமிழக அரசும் ஏற்றுக்கொண்டு அதற்கான முன்மொழிவை சங்கங்களுக்கு கொடுத்தது. இது வரலாறு.

ஆனால் கடந்த காலங்களில் அரசு ஊழியர்களுக்கு இணையாகவோ அல்லது மின்வாரிய ஊழியர்களுக்கு இணையாகவோ ஒப்பிட்டு ஊதிய உயர்வை பெறாமல், திடீரென்று தங்களுக்கும் ஊதிய உயர்வு 2.57 வழங்க வேண்டும் என்று போக்குவரத்துத் தொழிற்சங்கங்கள் பிரச்சனை செய்வதால் நமது ஊதிய உயர்வு இழுபறி ஆகியுள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில் 6.1.2018 அன்று நமது சங்கம், தொ.மு.ச., அண்ணாதொழிற்சங்கம், ஐ.என்.டி.யூ.சி.(சேவியர்) ஜனதா தொழிலாளர் சங்கம் மற்றும் ஐக்கிய சங்கம் ஆகியவற்றின் பொதுச்செயலாளர்கள் மின்வாரியத் தலைவரை சந்தித்தோம்.

1) களப்பிரிவில், கம்பியாளர் / வணிக உதவியாளர் பொறுப்பிலிருந்து மின்பாதை ஆய்வாளர்/வணிக ஆய்வாளர் பதவி உயர்வுக்கு 5 ஆண்டு பணிக்காலம் கணக்கிலெடுத்திட, கம்பியாளர் / வணிக உதவியாளர் மட்டுமின்றி அதன் கீழ்நிலைப் பொறுப்புகளின் காலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2) நீதிமன்ற வழக்கின் காரணமாக களப்பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பதவி உயர்வுப் பட்டியல்படி பதவி உயர்வு வழங்கிட வேண்டும், அது முடிந்த பின்னர் புதிய பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்ற சங்கங்களின் கோரிக்கையை வாரியத்தலைவர் ஏற்றுக் கொண்டார்.

3) போக்குவரத்துத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முழுவீச்சில் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்த நேரத்தில் மின்வாரியத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு நிலை பற்றிக் கேட்டதற்கு, பொங்கல் விடுமுறைக்குப் பிறகு முடிவினை தெரிவிப்பதாகக்கூறினார்.

அதன்படி இன்று 18.1.2018 வியாழக்கிழமை முற்பகல் வழக்கமாக வாரியத்துடன் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் கீழ்கண்ட 14 தொழிற் சங்கங்களின் தலைவர்கள் மின்வாரியத்தலைவரை சந்தித்து ஊதிய உயர்வினை விரைவில் வழங்கிட வற்புறுத்தினோம்.

1. TAMIL NADU ELECTRICITY WORKERS' FEDERATION.
2. TAMIL NADU ELECTRICITY BOARD ACCOUNTS AND EXECUTIVE STAFF UNION.
3. TAMIL NADU ELECTRICITY BOARD WORKERS' PROGRESSIVE UNION (LPF)
4. MINSARAPIRIVU ANNA THOZHIR SANGAM
5. TAMIL NADU MINVARIYA JANATHA THOZHILALAR SANGAM.
6. TAMIL NADU NATIONAL ELECTRICITY WORKERS FEDERATION (XAVIER)
7. TAMIL NADU NATIONAL ELECTRICITY WORKERS FEDERATION (SWARNARAJ)
8. TAMIL NADU ELECTRICITY BOARD ENGINEERS' SANGAM
9. TAMIL NADU ELECTRICITY EMPLOYEES CONGRESS.
10. TAMIL NADU ELECTRICITY BOARD THOZHILALAR PORIYALAR AIKKIYA SANGAM
11. TAMIL NADU ELECTRICITY BOARD ENGINEERS' ASSOCIATION.
12. BHARATHIYA ELECTRICITY EMPLOYEES FEDERATION.
13. TAMIL NADU ELECTRICITY BOARD CARD BILLING STAFF UNION.
14. TAMIL NADU ELECTRICITY BOARD DR.AMBEDKAR EMPLOYEES UNION.

தலைவர்களின் முறையீட்டினை பொறுமையாகக் கேட்டுக்கொண்ட வாரியத் தலைவர் ஏற்கனவே வாரியத்தால் கொடுக்கப்பட்ட உறுதி மொழிப்படி ஊதிய உயர்வு வழங்கப்படும். அதில் எந்த மாற்றமும் இல்லை. அதற்கான நடைவடிக்கையினை தானும், மின்துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார். ஓரிரு சங்கங்கள் கொடுத்திருக்கும் வேலை நிறுத்த அறிவிப்பினை குறிப்பிட்ட வாரியத்தலைவர் அவர்கள், ஊதிய உயர்வை வழங்க மறுத்தால்தானே வேலைநிறுத்தம் செய்ய வேண்டும்? நாங்கள் ஒருபோதும் அதனை மறுக்க வில்லையே. ஊதிய உயர்வை மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கிட அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வரும் வேளையில், வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையே. அது வீண்தானே? இதனை தவிர்க்கலாமே என்று தனது கருத்தினை தெரிவித்தார்.

ஊதிய உயர்வு 2.57 உறுதி. கூடுதலாக 1 ஆண்டுயர்வு உறுதி. நிலுவைத்தொகை 1.10.2017-லிருந்து உறுதி. இதற்கான இறுதி முடிவை ஏற்படுத்திட சிறிது அவகாசம் தேவை என்று கூறினார்.

மின்வாரியத்தலைவர் கூறிய சமாதானங்கள் ஏற்புடையவை என்றாலும் ஏற்கனவே 2 வருடங்கள் தாமதமாகிவிட்டது. மேலும் தாமதம் ஏற்படுத்தி, தொழிலாளர்கள் பொறுமை இழக்கின்ற நிலைமையை ஏற்படுத்திடவேண்டாம் என்று தொழிற்சங்கங்கள் கருத்து தெரிவித்து விரைவில் முடிவினை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டோம்.

அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைத்து ஒரு சுமூகப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திட்ட மின்சாரப்பிரிவு அண்ணா தொழிற்சங்கப் பொதுச்செயலாளர் திரு.T.விஜயரங்கன் அவர்களுக்கு நன்றி.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.